

# அத்தியாயம் - 10

***ஸாயிபாபாவின் வாழ்க்கை நடைமுறை - அவர் படுக்கும் பலகை - சீர்டியில் அவரின் வாசம் - அவரின் அறிவுரைகள் - அவரின் பணிவு - மிகவும் எளிய வழி***

✦ ✧ ✦

அன்புடன் எப்போதும் அவரையே (ஸாயிபாபாவையே) நினைவூட்டிக் கொள்ளுங்கள். ஏனெனில் அனைவர்க்கும் நன்மை செய்யும் கவனத்தால் கவரப்பட்டு, ஆத்மாவிலேயே உறைந்து நின்றார். வாழ்வு, சாவு என்னும் புதிரை விடுவிக்கும் வழி, அவரை மனத்தில் இருத்திக் கொள்வது மட்டுமே. சாதனை களுக்குள்ளேயே இதுதான் மிகமிக எளியதும் சிறந்ததுமான சாதனையாகும். ஏனெனில் அது எவ்விதச் செலவையும் உள்ளடக்காதது. இங்கு ஒரு சிறு முயற்சி பெரும் பரிசுகளைக் கொணர்கிறது. நமது புலன்கள் எல்லாம் நல்லமுறையில் இருக்குந்தோறும் நிமிடத்திற்கு நிமிடம், இந்தச் சாதனையைப் பழக வேண்டும். மற்ற எல்லாத் தேவதைகளும் வெற்றுத் தோற்றமே. குருவே ஒரே கடவுள். ஸத்குருவின் புனிதத் திருவடிகளை நினைவு கூர்வோமானால், அவர், மேலும் சிறப்பான நிலைக்கு நமது அதிர்ஷ்டத்தை மாற்றிவிட இயலும். அவருக்குச் சிறப்பாகச் சேவை செய்வோமானால், நாம் நமது சம்சாரத்தினின்று விடுபடுகிறோம். நியாயம், மீமாம்ஸை போன்ற தத்துவங்களை நாம் பயிலத் தேவையில்லை. அவரை நமது வழிகாட்டியாக நாம் அமைத்துக் கொள்வோமானால், நமது அனைத்துத் துன்பங்கள், கவலைகள் என்னும் கடலை எளிதாகக் கடந்து செல்லலாம். ஆற்றையும், கடலையும் கடப்பதில் நாம் மாலுமியை நம்பியிருப்பதைப் போன்றே, இவ்வுலக வாழ்வெனும் கடலைக் கடப்பதில், நமது ஸத்குருவை நாம் நம்ப வேண்டும். தமது அடியவர்களின்

தீவிரமான உணர்வையும், பக்தியையும் அவர் நோக்கி ஞானத்தையும், சாசுவதமான கழிபேருவகையையும் அவர்களுக்கு உரித்தாக்குகிறார்.

கடந்த அத்தியாயத்தில் பாபாவின் பிச்சையைப் பற்றியும், பக்தர்களின் அனுபவங்களைப் பற்றியும், மற்ற விஷயங்களைப் பற்றியும் கூறப்பட்டது. பாபா எவ்வாறு வாழ்ந்தார் என்றும், எவ்வாறு தூங்கினார், எவ்வாறு கற்பித்தார் என்றும், வாசகர்கள் தற்போது கேட்பார்களாக!

***பாபாவின் அற்புதமான படுக்கும் பலகை***

பாபா எங்கு, எவ்வாறு தூங்கினார் என்பதைக் காண்போம். நான்கு முழம் நீளமும், ஒரு முழம் அகலமும் உள்ள பலகையை பாபா படுத்து உறங்குவதற்காக, திரு. நானாஸாஹேப் டேங்க்லே கொணர்ந்தார். அதனைத் தரையில் போட்டு அதன்மீது படுத்து உறங்குவதற்குப் பதிலாக, மசூதியின் உத்தரங்களில், இற்றுப் போன கந்தல் துணிகளால், அதை ஒரு ஊஞ்சல் போலக் கட்டி, அதன்மீது படுத்துறங்க ஆரம்பித்தார். எப்படி "பாபா"வின் உடலைத் தாங்குகிறது என்பது ஒருபுறம் இருக்க, தனியாகப் படுக்கையையே தாங்குவது பிரச்சனையாக உள்ள அளவுக்கு அத்துணை மெல்லியதாகவும், இற்றுப்போயும் அக்கந்தல் துணி இருந்தது. ஆனால் எவ்விதமாகவோ பாபாவின் லீலையால் மட்டுமே அக்கந்தல் துணி பாபாவின் கனத்துடன், பலகையையும் தாங்கவே செய்தது. பலகையின் நான்கு மூலைகளிலும், மூலைக் கொரு மண்விளக்கு வீதம் ஏற்றி, இரவு முழுவதும் எரிந்து கொண்டிருக்கும் படியாக வைப்பார். இப்பலகையின் மீது, பாபா அமர்ந்து கொண்டிருப்பதையோ, துயின்று கொண்டிருப் பதையோ கண்ணுறும் தரிசனமானது தேவர்களுக்கும் கிடைப் பதற்கு அரியதொன்றாகும்! அதில் பாபா, எங்ஙனம் ஏறி, இறங்கினார் என்பது அனைவருக்கும் வியப்பை விளைவிப் பதாய் இருந்தது. இதனை அறியும் ஆர்வத்துடன் பாபா ஏறு வதையும், இறங்குவதையும் காண்பதற்காகப் பல கவனமுள்ள பார்வையாளர்கள் கவனித்துக் கொண்டிருந்த போதிலும் ஒருவரும் அதனைக் காண்பதில் வெற்றிபெறவில்லை. இவ்விசித்ரமான அருஞ்செயலை நுணுகிக் காண்பதற்காக கூட்டம் அதிகரிக்கவே,

ஒருநாள் பாபா பலகையைத் துண்டு துண்டுகளாக உடைத்து எறிந்துவிட்டார். எட்டுவிதமான ஸித்தி களும் பாபாவின் ஆணையில் இருந்தன. அவர் அவைகளை ஒரு போதும் பயிற்சிக்கவோ அல்லது அவைகளுக்காக ஏங்கவோ இல்லை. அவைகள் பாபாவின் முழுமையினால் தாமாகவே அவரை வந்தெய்தின.

***பிரம்மத்தின் உருவ வெளிப்பாடு***

ஐந்தடி மூன்று அங்குல உயரமுள்ள பாபா மனிதனைப் போலத் தோற்றமளித்தாலும், அனைவரின் இதயத்திலும், அவர் வாழ்ந்தார். அந்தரங்கமாக அவர் பந்தமற்றவராகவும், அக்கறை யற்றவராகவும் இருந்தாலும், பகிரங்கத்தில் பொது மக்களின் நலத்தை விரும்பினார். அகத்திலே மிகவும் ஆர்வமற்றவராக் இருப்பினும், புறத்தில் தமது பக்தர்களுக்காக ஆசைகள் நிரம்பப் பெற்றவராக இருந்தார். உள்ளே சாந்தத்தின் இருப்பிடமாக அவர் இருப்பினும், வெளியில் இருப்புக் கொள்ளாதவராய் இருந்தார். அந்தரங்கமாய் பிரம்மானந்த நிலையை அவர் எய்தியவராய் இருந்தார். பகிரங்கமாய் பிசாசைப் போன்று நடந்து கொண்டார். அந்தரங்கமாய் அவர் அத்வைதத்தை விரும்பினார். பகிரங்கமாய் உலகோடு கட்டுப்பட்டவராய் இருந்தார். சில நேரங்களில் அனைவரையும் பாசம் ததும்ப நோக்கினார். சில சந்தர்ப்பங்களில் அவர்கள்மீது கற்களை விட்டெறிந்தார். சில சமயம் அவர்களைக் கடிந்து கொண்டார். சில சந்தர்ப்பங்களில் அவர்களை அன்புடன் அரவணைத்தார். அமைதியாகவும், பதட்டமற்றவராகவும், பொறுமையுள்ளவராகவும், நல்ல சமநிலை யுள்ளவராகவும் இருந்தார். ஆத்மாவிலேயே உறைந்து அதனாலேயே கவரப்பட்டு அதன் வயமாக ஆனார். தமது பக்தர்களுக்காகச் செய்ய வேண்டியவற்றை நன்கு செய்து முடித்தார். எப்போதும் அவர் ஒரே ஆசனத்தில் அமர்ந்திருந்தார்., ஒருபோதும் பிரயாணம் செய்யவில்லை. அவரது "தண்டம்"* சிறு குச்சியேயாகும். அதை எப்போதும் தமது கையில் எடுத்துச் சென்றார். சாந்தமாகவும், எண்ணங்களில் இருந்து விடுபட்டவராகவும் இருந்தார்.

* சன்னியாசிகள், துறவின் அடையாளமாக எப்பொழுதும் தங்களுடன் வைத்துக் கொண்டிருக்க வேண்டிய நீளமான மூங்கில் கோல்.

செல்வத்தையும், புகழையும், அவர் லட்சியம் செய்யாது, பிச்சை எடுத்தே வாழ்ந்தார். இத்தகைய வாழ்க்கையையே அவர் நடத்தினார். "அல்லா மாலிக்" இறைவனே எஜமானன், என்று அவர் எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தார். அடியவர்களிடம் அவர் கொண்டிருந்த அன்பு ஏராளமானதும், தடையற்றதும் ஆகும். ஆத்மஞானச் சுரங்கமாகவும், பரமானந்தம் முழுமையும் நிரம்பப் பெற்றவராகவும் இருந்தார். ஸாயிபாபாவின் தெய்வீக ரூபம் இத்தகையது. அத்தகைய எல்லையற்ற, முடிவற்ற, பாகுபாடற்ற, புல்பூண்டிலிருந்து பிரம்மா வரையுள்ள பிரபஞ்சமனைத்தும் அரவணைக்கும் ஏக தத்துவமே ஸாயிபாபாவாக அவதரித்தது. உண்மையில் தகைமையும், நல்ல அதிர்ஷ்டமும் பெற்ற மக்கள் தங்கள் கைகளில் இந்தப் **பொக்கிஷப் புதையலைப்** பெற்றனர். ஸாயிபாபாவின் உண்மையான மதிப்பை அறியாதவர்கள், அவரை ஒரு மனிதனாக, சாதாரண மானிடப் பிறவியாகக் கருதினார்கள். கருதுகிறார்கள், அவர்கள் உண்மையிலேயே பரிதாபத்துக்கு உரியவர்கள் ஆகிறார்கள்.

**பாபாவின் சீர்டி வாசமும், பிறந்த ஆண்டு பற்றிய அனுமானமும்**

ஸாயிபாபாவின் சரியான பிறந்த நாளையும், அவரது பெற்றோரையும் ஒருவரும் அறியார்கள். அவரது சீர்டி வாசத்தில் இருந்து அதை ஏறக்குறையத் தீர்மானிக்கலாம். அவர் பதினாறு வயதுப் பையனாக இருக்கும்போது முதலில் சீர்டிக்கு வந்தார். மூன்றாண்டுகள் அங்கு தங்கியிருந்தார். பின்னர் திடீரென்று சில காலம் மறைந்துவிட்டார். சிறிது காலத்துக்குப்பின் நைஜாம் ஔரங்காபாத்துக்கு அருகில் இருபது வயது நிரம்பி இருக்கும் போது தோன்றினார். மீண்டும் சீர்டிக்கு, சாந்த் பாடீலின் கல்யாண கோஷ்டியுடன் திரும்பினார். பின்னர் தடையற்ற அறுபது ஆண்டுகள் அவர் சீர்டியில் வாழ்ந்தர். அதற்குப் பின்னர் 1918-ஆம் ஆண்டில் மஹாசமாதி அடைந்தார். இதில் இருந்து பாபாவின் பிறந்த வருடம் ஏறக்குறைய 1838-ஆக இருக்கலாம் என்று கூற இயலும்.

**பாபா மேற்கொண்ட பணியும், உபதேசமும்**

முனிவர் ராம்தாஸ் (1608 - 1681) பதினேழாம் நூற்றாண்டில் செழித்தோங்கி விளங்கினார். பசுக்களையும், அந்தணர்களையும்,

யவனர்களிடமிருந்து (மொகலாயர்களிடமிருந்து) காப்பாற்றுதல் என்னும் தான் மேற்கொண்ட குறிக்கோள் பணித்திட்டத்தை பெருமளவிற்கு நிறைவு செய்தார். ஆனால் அவருக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர், இரு வகுப்பினர்களுக்குள்ளும் மீண்டும் (இந்து, முஸ்லீம்களுக்குள்) வேற்றுமை அதிகரித்து, அந்தப் பாதாளப் பள்ளத்தினை இணைக்கும் பாலமாக ஸாயிபாபா விஜயம் செய்தார். அனைவருக்கும் அவர் தம் நிரந்தரமான உபதேசத்தின் உட்கருத்து இவ்வாறானதாகும். "ராமரும் (இந்துக்களின் தெய்வம்) ரஹீமும் (முஸ்லீம்களின் தெய்வம்) ஒன்றே ஒன்றுதான். அவர்களுக்குள் எள்ளளவும் வேற்றுமை இல்லை. பின்னர் ஏன் அவர்களின் அடியவர்கள் சச்சரவு புரிந்து தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்? கள்ளங்கபடு அறியாத மக்களாகிய நீங்களும், குழந்தைகளைப்போல் கைகள் கோர்த்து இரு வகுப்பினரையும் ஒன்றாக இணைத்து விவேகத்துடன் நடந்து கொள்ளுங்கள். இங்ஙனமாக உங்களது குறிக்கோளாகிய தேசீய ஒற்றுமையை நீங்கள் ஈட்டப் பெறுவீர்கள். போராடி வாதாடுதல் நன்றன்று. எனவே விவாதிக்க வேண்டாம். மற்றவர்களுடன் போட்டி போட வேண்டாம். எப்போதும் உங்களது அக்கறையினையும் நலத்தினையுமே கருத்தில் கொள்வீர்களாக. கடவுள் உங்களைக் காப்பாற்றுவார். யோகம், தியாகம், தவம், ஞானம், என்பன கடவுளையறியும் நெறிகள். இந்த வழிகள் எதிலேனும் ஒன்றின் மூலம், நீங்கள் இதில் வெற்றி பெற இயலாவிடில், உங்கள் பிறப்பு வீணேயாகும். யாரேனும் ஏதாவது தீமையை உங்களுக்குச் செய்வானாகில், அதற்காகப் பழிக்குப் பழி வாங்காதீர்கள். நீங்கள் ஏதேனும் செய்ய இயலுமானால் பிறருக்குச் சிறிது நன்மைகளைச் செய்வீராக". இது அனைவருக்கும் "ஸாயிபாபா" அளித்த உபதேசத்தின் சுருக்கம். இது லௌகிக ஆன்மிக விஷயங்கள் இரண்டிலுமே நலம் பயப்பதாகும்.

**ஸத்குருவாக ஸாயிபாபா**

ஏராளமாக குருக்கள் இருக்கின்றனர். தங்கள் கரங்களில் ஜால்ரா தாளக்கருவி வீணை சகிதம் வீடுதோறும் சென்று தமது ஆத்மீகத்தைப் படாடோபம் செய்து கொள்ளும் குருக்கள் உண்டு. அவர்கள் மந்திரங்களைத் தமது சீடர்களின் காதில் ஓதி

அவர்களிடமிருந்து பணத்தைக் கறப்பர். தமது சீடர்களுக்கு, கடவுள் பற்றையும், கடவுள் நம்பிக்கையையும் உபதேசிப்பதாக உணர்ச்சி வகையில் வெளிப்படையாகக் காட்டிக் கொள்வர். ஆனால் தாங்களே கடவுள் பற்றற்றவராகவும் இருப்பர். ஆனால் ஸாயிபாபா தமது தகைமையையும் (கடவுள் பற்று), மெய்யுணர் வையும், காண்பிப்பதற்கு எவ்விதச் சிறிய முயற்சியையும் எடுக்கவேயில்லை. அடியவர்களிடம் பெருமளவு அன்பு கொண்டிருந்தார். இரண்டு வித்மான குருக்கள் இருக்கின்றனர். (1. நியத் (நியமிக்கப்பட்டவர், குறிக்கப்பட்டவர்) 2. அநியத் (நியமிக்கப்படாதவர், பொதுவானவர்). பின்னவர்கள் தங்கள் உபதேசங்களால் நம்மிடத்தில் உள்ள நற்பண்புகளை அபிவிருத்தி செய்கின்றனர். நமது இதயத்தைத் தூய்மைப்படுத்து கிறார்கள். நம்மை வீடுபேற்றை அடையும் பாதையில் செல்லத் தூண்டுகிறார்கள். இதற்கு மாறுபாடாக முன்னவர்களாகிய குருக்களோ நமது தனி இயல்பை (பேத உணர்வை) அழித்து "நீயே அது" என்று உணரச் செய்து, நம்மை ஏகத்வத்தில் ஸ்தாபிக்கின்றனர். பல்வேறு வகையான உலக ஞானத்தை அளிக்கும் பல திறத்தான குருக்கள் இருக்கின்றனர். ஆனால் நம்மை நமது இயற்கையில் (ஆத்மாவில்) நிலைப்படுத்தி உலக வாழ்வென்றும் சாகரத்துக்கு அப்பால் நம்மைச் சுமந்து செல்பவரே ஸத்குரு எனப்படுவார். ஸாயிபாபா அத்தகைய ஒரு ஸத்குரு ஆவார். அவருடைய பெருமையை விவரிக்க இயலாது. யாரேனும் பாபாவின் தரிசனத்தைப் பெறச் சென்றால், கேட்கப் படாமலேயே, அவரது கடந்தகால, நிகழ்கால, எதிர்காலங்களின் ஒவ்வொரு விவரத்தையும் உரைப்பார். எல்லா ஜீவராசிகளிடமும் அவர் தெய்வீகத்தைக் கண்டார். நண்பர்களும், பகைவர்களும் அவருக்கு ஒன்றே. அவாவற்றவராகவும் சமன் செய்யப்பட்டவ ராகவும் இருந்த அவர் தீயோருக்கும் கட்டுப்பட்டுச் செவி சாய்த்தார். சுபிட்சத்திலும், துரதிர்ஷ்டத்திலும் அவர் ஒரே மாதிரியாய் இருந்தார். எப்போதும், எவ்வித ஐயமும் அவரைத் தீண்டவில்லை. இவ்வுடம்பில் அவர் இயங்கினாரெனினும் எள்ளளவும் தமது உடம்பிலேயோ, வீட்டிலேயோ பற்றற்ற வராகவே இருந்தார். உடலுருக்கொண்டு அவர் தோற்றமளித் தாலும் உண்மையில் அருவமானவர். அதாவது இந்த வாழ்க்கை யிலிருந்தே விடுதலையானவர்.

**பாபாவின் பணிவுடைமை**

பரமாத்மா அல்லது கடவுள் ஆறு குணாதிசயங்களை உடையவராகக் கூறப்படுகிறது. அதாவது (1) புகழ், (2) செல்வம், (3) பற்றின்மை, (4) ஞானம், (5) பேராற்றல், (6) வள்ளன்மை ஆகியவையாகும். பாபா, இவை அனைத்தையும் தன்னிடத்துடையவராக விளங்கினார். இவ்வுடம்பில் அடியவர்களுக்காக அவதரித்தார். அவரது அருளும், அன்பும் அதிசயத்தக்கவை. ஏனெனில் தமது அடியவர்களை, தம்மிடம் ஈர்த்து இழுத்தார். இல்லாவிடில் யார்தான் அவரை அறிந்திருக்க இயலும்! அவர் தமது பக்தர்களின் பொருட்டாக வாக்கின் தெய்வம் (ஸரஸ்வதி தேவி) கூட உரைக்ககத் துணியாத அத்தகைய சொற்களை அவர் கூறினார். இதோ ஒரு உதாரணம், மிகவும் எளிமையாகப் பின் வருமாறு கூறினார் : "நான் அடிமைகளுள் அடிமை. உங்களுக்குக் கடன்பட்டவன். உங்களது தரிசனத்திலேயே திருப்தியடைகிறேன். தங்களது திருவடிகளைத் தரிசிக்கும் பெரும் பாக்கியம் பெற்றேன். நான் தங்களது மலத்திலுள்ள ஒரு புழு. அங்ஙனமாகவே என்னை நான் ஆசீர்வதிக்கப்பட்ட வனாகக் கருதுகிறேன்". எத்தகைய பணிவுடைமை? இதைப் பிரசுரிப்பதன் மூலம் ஸாயிக்கு எத்தகைய அவமரியாதையாவது செய்யப்பட்டது என்று எவரேனும் நினைப்பாராகில், அவர்களிடம் மன்னிப்பை வேண்டிக் கொள்கிறோம். இதற்குப் பிராயச் சித்தமாக பாபாவின் நாமத்தைப் பாடி ஜபிப்போமாக!

பாபா வெளிப்படையாக உணர்ச்சி நுகர்வுக்கூறு, பொருள்களால் மகிழ்பவர் போல் தோன்றினாலும், அவருக்கு அவை களில் எள்ளளவும் தனிச்சுவைத் திறமில்லை. அவைகளை மகிழ்ந்து அனுபவிக்கும் பிரக்ஞைகூட இருந்ததில்லை. அவர் உண்டார் எனினும், சுவை அறியவில்லை. பார்த்தாரெனினும், பார்த்தவைகளில் அவர் எவ்வித விருப்பையும் உணர்ந்திருக்கவில்லை. காம உணர்வுகளைப் பற்றிக் கருதுங்கால் அவர் ஹனுமானைப் போன்ற பூரண பிரம்மச்சாரியாவார். எதன்பாலும் பற்றற்றவராக இருந்தார். அவரே தூய உணர்வுகளின் திரளாகவும் ஆசை, கோபம், மற்ற உணர்ச்சிகள் அடங்கி அமைதியுறும் இடமாகவும் திகழ்ந்தார். சுருக்கமாக, அவர் அவாவற்றவர்.

கட்டற்றவர், முழு நிறைவானவர். இக்கூற்றைச் சித்தரிக்கும் வகையில் ஒரு அதிசய நிகழ்ச்சியைக் கூறலாம்.

**நானாவல்லி**

சீர்டியில் நானாவல்லி என்ற பெயரில் தனிப்போக்குள்ள ஒரு விசித்திரமான மனிதன் ஒருவன் இருந்தான். அவன் பாபாவின் வேலைகளையும், காரியங்களையும் கவனித்து வந்தான். ஒரு முறை அவன், ஆசனத்தில் அமர்ந்திருந்த பாபாவிடம் சென்றுதான் அதில் உட்கார வேண்டியிருப்பதால் பாபாவை எழுந்திருக்கும்படிக் கூறினான். பாபா உடனடியாக எழுந்திருந்து, தாம் அமர்ந்திருந்த ஆசனத்தைக் காலி செய்தார். அதில் அவன் அமர்ந்து கொண்டான். சிறிது நேரம் அமர்ந்திருந்த பின்னர் அவன் எழுந்திருந்து, பாபாவை அமர்ந்து கொள்ளச் சொன்னான். பாபா ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு அவன் பாபாவின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்துவிட்டுச் சென்றுவிட்டான். தாம் அதிகாரம் செலுத்தப்பட்டதிலும், வெளி யேற்றப்பட்டதிலும், பாபா எள்ளளவும் வருத்தம் அடைய வில்லை. இந்த நானாவல்லி, பாபா மஹாசமாதி எய்திய பதிமூன்றாவது நாள், தானும் காலமாகும் அந்த அளவிற்கு பாபாவை நேசித்தான்.

***மிகவும் எளிய வழி***

முனிவர்களுடைய கதைகளைக் கேட்டதும், அவர்களின் ஸத்சங்கத்தில் இருப்பதும்.

புறத்தில் ஸாயிபாபா சாதாரண மனிதர் போன்று நடித்தாலும், அவரது செய்கைகள் அவரது அசாதாரண புத்தி சாதுர்யத்தையும், திறமையையும் காண்பித்தன. அவர் எதைச் செய்த போதிலும் அவைகள் அடியவர்களின் நன்மை கருதியே செய்யப்பட்டன. தமது அடியவர்களுக்காக, சுவாச நியமத்தையோ, அல்லது எத்தகைய வழிபாட்டு முறைகளையோ, அவர் வகுத்துரைக்கவில்லை, அல்லது எவ்வித மந்திரத்தையும், எவர் காதிலும் அவர் ஓதவில்லை. எல்லா புத்திசாலித் தனத்தையும் விட்டொழித்துவிட்டு எப்போதும் **"ஸாயி ஸாயி"** என்று ஞாபகமூட்டிக் கொள்ளும்படியும் அவர்களிடம் கூறினார். இதைச் செய்வீர்களானால் உங்களது கட்டுக்களெல்லாம் விடுபட்டு

விடுதலை அடைவீர்கள் என்று உரைத்தார். ஐந்து நெருப்புக்களிடையே அமர்தலும், யாகங்களும், பாராயணங் களும், அஷ்டாங்க யோகங்களும் அந்தணர்களால் மட்டுமே இயலுவதாகும். மற்றைய வகுப்பினருக்கு அவைகளால் எவ்விதப் பலனும் இல்லை. மனத்தின் தொழில், நினைப்பதாகும். எண்ணமின்றி அது ஒரு நிமிடமும் இருக்க முடியாது. புலன் உணர்விற்குச் சார்பான பொருளை அதற்கு நீங்கள் அளித்தால் அதைப்பற்றி நினைக்கும். அதற்குக் குருவை அளித்தால் அது குருவைப் பற்றி எண்ணமிடும். நீங்கள் மிக்க கவனத்துடன் ஸாயியின் பெருமையையும் பேராற்றலையும் கேட்டீர்கள். இதுவே ஸாயியினுடைய இயற்கையான நினைவூட்டிக் கொள்ளுதலும், வழிபாடும், கீர்த்தனையும் ஆகும். மேலே கூறப்பட்ட மற்ற சாதனைகளைப் போன்று இக்கதைகளைக் கேட்பது என்பது அவ்வளவு கடினமானது அல்ல. இக்கதைகள் சம்சாரமென்னும் (உலக வாழ்க்கை) பயத்தை அழித்து, உங்களை ஆத்மீகப் பாதையில் அழைத்துச் செல்கின்றன. எனவே இக்கதைகளைக் கவனத்துடன் கேளுங்கள். அவைகளைத் தியானியுங்கள். அவைகளை ஜீரணித்துக் கொள்ளுங்கள். இம்முறை பின்பற்றப் பட்டால் அந்தணர்கள் மட்டுமன்று, பெண் இனமும், கீழ்க் குலத்தாரும் தூய்மை அடைந்து புனிதமடைவர். நீங்கள் உங்களது உலகக் கடமைகளைச் செய்து கொண்டோ, கவனித்துக் கொண்டோ இருக்கலாம். ஆனால் உங்களது மனத்தை ஸாயியிக்கும் அவரின் கதைகளுக்கும் அளித்துவிடுங்கள். பின்னர் அவர் உங்களை ஆசீர்வதிப்பது நிச்சயமாகும். இதுவே மிகவும் எளிமையான வழியாகும். எனினும் அனைவரும் ஏன் அதைப் பின்பற்றவில்லை? காரணம் என்னவென்றால் கடவுள் அருளின்றி முனிவர்களின் கதைகளைக் கேட்கும் ஆர்வம் நமக்கு வருவதில்லை. கடவுள் அருளால் எல்லாம் தட்டுத் தடங்கல்களின்றியும் எளியதாகவும் நடந்தேறுகிறது. முனிவர் களின் கதைகளைக் கேட்பது என்பது ஒரு வழியில் அவர்களின் ஸத் சங்கத்தைப் பெறுதலை நிகர்ப்பதாகும். முனிவர்களின் கூட்டுறவின் முக்கியத்துவமானது மிகவும் பெரியது. நமது உடல் உணர்வையும் அஹங்காரத்தையும் அகற்றி பிறப்பு, இறப்பு என்னும் சங்கிலித்

தொடர்ச்சியை அறவே அழிக்கிறது. இதய முடிச்சுக்களையெல்லாம் துண்டாக அறுத்துவிட்டு தூய உணர்வான கடவுளிடத்திலேயே நம்மை அழைத்துச் செல்கிறது. புலன் உணர்வு விஷயங்களைப் பற்றி நமது அவாவின்மையை நிச்சயம் அதிகரித்து, இன்ப துன்பங்களை நாம் முழுவதும் லட்சியம் செய்யாதவாறும் ஆக்கி, ஆத்மீகப் பாதையில் மென்மேலும் நம்மை அழைத்துச் செல்கிறது. நாமஸ்மரணம், வழிபாடு அல்லது பக்தி போன்ற சாதனைகள் உங்களிடம் இல்லையாயினும், ஞானிகளிடம் உங்கள் முழு இருதயத்தோடு சரணாகதியடைவீர்களானால், இவ்வுலக வாழ்வெனும் பெருங் கடலுக்கு அப்பால் அவர்கள் நம்மைப் பத்திரமாக இட்டுச் செல்வார்கள். இக்காரணத்துக்காகவே முனிவர்கள் உலகில் அவதரிக்கிறார்கள். உலகத்தின் பாவங்களை அடித்துச் செல்லும் கங்கை, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி முதலிய புனித ஆறுகள் கூட முனிவர்கள், ஸ்நானத்திற்காகத் தங்களிடம் வரவேண்டு மென்றும், தங்களைப் புனிதப்படுத்த வேண்டுமென்றும் விரும்பு கின்றன. முனிவரின் பேராற்றல் அத்தகையது. முந்தைய பிறவி களில் நாம் செய்த நற்கருமங்களின் சேமிப்புக் குவியல்களால் நாம் ஸாயிபாபாவினுடைய திருவடிகளை அடையப் பெற்றோம்.

ஸாயியின் ரூப தியானத்துடன், இந்த அத்தியாயத்தை நாம் முடிக்கிறோம். அத்தகைய சுந்தரமான அழகு படைத்த ஸாயி, மசூதியின் விளிம்பில் நின்றுகொண்டு "உதி"யை ஒவ்வொரு பக்தருக்கும், அவரவர் நன்மையைக் கருத்தில் கொண்டு விநியோகித்துக் கொண்டிருக்கிறார். இவ்வுலகை வெறுமையாயக் கருதி பரமானந்தத்திலேயே எப்போதும் திளைத்துக் கொண்டு இருக்கும் அவர் முன்னால் கீழே வீழ்ந்து வணங்குகிறோம்.

***ஸ்ரீ ஸாயியைப் பணிக அனைவர்க்கும் சாந்தி நிலவட்டும்.***